**செ. கு. எண்:07** **நாள்: 23.05.2021**

**<u>மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி</u>**

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களின் தாயார் திருமதி. கருப்பாயி அம்மாள் அவர்கள் இயற்கை எய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பெற்றெடுத்த அன்னையின் இழப்பு என்பது எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அத்தகைய அன்னையை இழந்து வாடும் அமைச்சர் திரு.பெரியகருப்பன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**